உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி–௪௨.] தாரண-ஞு மார்கழிமீ [பகுதி–௨.

Vol. 42. December 1944-January 1945 No. 2.

உள்ளுறை.

வாழ்க்கையும் விஞ்ஞானமும்:- } ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. ௧௩—௧௧

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள் :— ௨0

பண்டைத்தமிழர்:— } சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர் ௨௧—௨௩

மதிப்புரை:— ... ... ௨௩—௨௪

ஒரு குறிப்பு:— ௨௪

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சஉ.] தாரண-ஹூ மார்கழிமீ [பகுதி—உ.

Vol. 42. December 1944-January 1945. No. 2.

வாழ்க்கையும் விஞ்ஞானமும்*

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.

[செந்தமிழ் சக-ஆம் தொகுதியின் உசுO-ஆம் பக்கத் தொடர்ச்சி]

விஞ்ஞானமும் கலையும்.

'இனிமையற்றது விஞ்ஞானம்; அது சுவையற்றது; வறட்சியுடையது; மனத்தை வறளச்செய்வது. இனிமை நிறைந்துததும்புவது கலை; அது ரஸம்செறிந்தது; மனோபாவம் நிரம்பியது; மனத்தைக் குளிர்வித்துத் தளிர்க்கச்செய்வது. ஆதலால் கலைக்கும் விஞ்ஞானத்துக்கும் பிறவிப்பகை' என்று பலர் நினைக்கிறார்கள். இது தவறு.

விஞ்ஞானத்துக்கும் கலைக்கும் மூன்றுவிதமான தொடர்புகள் இருக்கின்றன; முதலாவது, கலையைக்குறித்த விஷயங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டாலன்றி அவை ஞானமாகா. கலையின் தத்துவத்தை உணர்வதற்கு அறிவும் பயிற்சியும் சீரான—அதாவது விஞ்ஞான—மனநிலையும் வேண்டும். இம்மனநிலை கலைவளர்ச்சிக்கு இன்றியமையாதது. இரண்டாவதாக, விஞ்ஞானவிஷயங்களிற்

---

*மயிலைத்தமிழ்ச்சங்கத்திற்செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது.

பல கலைக்கு உரிய விஷயங்களாக இருக்கின்றன; கலைகளை வளர்க்கின்றன; கலைகளாற் பாராட்டப்படுகின்றன.*

இலக்கியத்துறையிலே விஞ்ஞானம் ஊடுருவி, உண்மைவிஞ்ஞானமும் போலிவிஞ்ஞானமும், சீரியகவனமும் அரைகுறைக்கவனமுமாக அதை நிறைத்துநிற்கிறது என்று சொல்லலாம்.

சில உதாரணங்களைப் பார்ப்போம். பவளக்கொடிமாலையிலே அல்லி சொல்லுகிறாள்,

'பாலன் புலந்திரற்குப் பவளத்தேர் வேண்டுமாம்
அறிந்தால் உரையுங்கள் அழகான ராஜர்களே!'
இவ்வார்த்தையைக் கேட்டு ஏதுரைப்பார் மந்திரிமார்?
'இங்கெங்கும் கிடையாது இயலான நற்பவளம்,
வடக்கே வெகுதூரம் வனுந்திர தீவாந்திரத்தில்
தீவாந்திரக் காட்டிற் செம்பவளம் விளைகிறது
பன்னிரு காதவழி பவளம் விளைகிறது'

என்று.

கடல்நீரில் வாழும் சிறு பூச்சிகளின்கூடே பவளம் என்பது விஞ்ஞானிகள் அறிந்த உண்மை. பாண்டிநாட்டின் வடக்கே வனுந்தரதீவாந்திரக்காட்டில் அது விளைகிறது என்பது வெறும் கற்பனை.

அரைகுறைக்கவனத்தால் தவறான அபிப்பிராயம் ஏற்படுவதற்கு உதாரணமாகச் சிலவற்றைக் காட்டலாமென்று நினைக்கிறேன். நண்டு, சிலந்தி, தேள் முதலிய சில பிராணிகளின் குஞ்சுகள் தாயின்வயிற்றைப் பிளந்துகொண்டு வெளியேவருகின்றன என்னும் கருத்துப் பல மொழிகளிலே காணப்படுகிறது.

---

*Science is the substance of Literature என்றும், Science supplies the raw materials of Art என்றும், Many Fairy Tales are artistic expressions of very sound Science என்றும் சொல்லுவது இதனாலேதான்.

> "புத்தன்தாய் நண்டிப்பி வாழை புனமூங்கில்
> கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி—இத்தனையும்
> வேலாலும் வாளாலும் அன்றியே தாங்கொண்ட
> சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு"

என்பது உலோகவசனம்.

> "நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங்காலத்திற்
> கொண்ட கருவளிக்கும் கொள்கைபோல்"

என்பது நல்வழி.

> 𑌯𑌥𑌾 𑌚 𑌵𑍇𑌣𑍁𑌃 𑌕𑌦𑌲𑍀 𑌨𑌡𑍋 𑌵𑌾
> 𑌫𑌲𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌯 𑌨 𑌭𑍂𑌤𑌯𑍇𑌽𑌤𑍍𑌮𑌨𑌃 ।
> 𑌤𑌥𑍈𑌵 𑌮𑌾𑌂 𑌤𑍈𑌃 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌾𑌂
> 𑌆𑌦𑌾𑌸𑍍𑌯𑌸𑍇 𑌕𑌰𑍍𑌕𑌟𑌕𑍀𑌵 𑌗𑌰𑍍𑌭𑌮𑍍 ॥

இதன்பொருள்:—"மூங்கிலும் வாழையும் கோரையும் எவ்வாறு தம் நாசத்தின்பொருட்டுப் பலிக்கின்றனவோ, தம் நன்மையின்பொருட்டுப் பலிக்கிறதில்லையோ, பெண்நண்டு எவ்வாறு (தன் நாசத்தின்பொருட்டுக்) கர்ப்பத்தைத்தரிக்கிறதோ அவ்வாறே அந்தப் பாண்டவர்களால் எல்லாப்பக்கங்களிலும் பாதுகாக்கப்படுகின்ற என்னை (உன்விநாசத்தின்பொருட்டு) எடுக்கப் போகிறாய்"

என்று பாண்டவர்மனைவியாகிய திரௌபதி தன்னைத் தேரில் பலாத்காரமாக எடுத்துச்சென்ற ஜயத்திரதனைநோக்கிக்கூறுவதாக மகாபாரதத்தில் வனபர்வத்தில் ஒரு சுலோகம் கூறுகிறது (CCLXIX-9).

நண்டு கவசம்பூண்ட பிராணி. கவசத்தின் உள்ளே உடலையுடைய நண்டு வளர்ச்சியடைந்து பெரிதாகிறது. கவசம்மட்டிலும் உடலோடு வளராமல் பழைய அளவாகவே இருக்கிறது. ஆதலால் நண்டு ஓரளவு வளர்ச்சிபெற்றதும் கவசம் விட்டுப்போகிறது. பாம்பு சட்டைகழற்றுவதுபோல் நண்டும் பிளவுபட்ட கவசத்தைக் கழற்றி

விடுகிறது. வெடித்த உறையினின்று வெளிவருவது நண்டின் குஞ்சு அன்று; அதே நண்டுதான்.*

பாம்பைக் கட்செவி என்று கூறுவது பாதி கற்பனை; பாதி அரைகுறைக் கவனம். பாம்புக்கு வெளிக்காது இல்லை; பாம்பினத்திற்கும் பல்லியினத்துக்கும் உள்ள பேதங்களில் அதுவும் ஒன்று.†

குளவி புழுவைக் கொட்டிக் கொட்டிக் குளவியாக்கிவிடுகிறது என்பது அரைகுறைக் கவனத்தால் உண்டாகிய தவறான எண்ணம்.

> "அஞ்சிறை அறுபதம் அடைந்த கீடத்தைத்
> தஞ்செனத் தன்மய மாக்கும் தன்மைபோல்"

என்று கம்பன் பாடுவது சீரான விஞ்ஞான அறிவோடு ஒவ்வாத உவமை. உண்மையில் நடப்பது என்ன என்றால்: குளவி எங்கிருந்தோ ஒரு புழுவைத் தேடிக் கொண்டுவருகிறது. அதைக் கொட்டிக் குற்றுயிராக்கித் தான் கட்டும் கூட்டுக்குள் வைக்கிறது.

***The Crabs**: "Their method of growth is very curious. Other animals as they increase in size, experience no particular inconvenience. No so the Crustacea. Their bodies are closely enveloped in a strong, unyielding mail, which cannot grow with them. Their armour is therefore cast off every year, and a fresh coat formed to suit their increased dimensions. Not only is the armour cast off, but even the covering of the eyes, the tendons of the claws, and the lining membrane of the stomach with its teeth"

—J. C. Wood, Robinson—Natural History.

† Another difference between snakes and most lizards is the absence, among all the former, of any trace of the external ear. Internally, the serpent's ear consists of a thread-like bone and crude accessories. The ear seems to be in a state of degeneracy.

–'Reptiles of the World'–R. L. Ditmars.

வைத்து அதன்மேல் தன் முட்டை ஒன்றை இட்டுக் கூட்டை மூடி விடுகிறது. முட்டை நாளடைவில் பொரித்து, தனக்கென்று வைக்கப்பட்டிருக்கும் புழுவை உண்டு வளர்கிறது. வளர்ந்து உரு மாறிக் குளவியாகிறது. குளவியாகியபின் கூட்டைத் துளைத்துக் கொண்டு வெளியேவருகிறது.

[ஹென்றி பாபர் என்னும் விஞ்ஞானி இதைப்பற்றிக் கூறுவதைக் கவனியுங்கள்.

A slender waist, a slim shape, an abdomen tapering very much at the upper part and fastened to the body as though by a thread; black raiment with a red sash across the belly–there you have a description of these burrowers–the Ammophilas (Sand wasp)

The Sand Wasp seizes the caterpillar by the back of the neck with the curved pincers of her jaws. The Grey worm struggles violently, rolling and unrolling its body. The Wasp is quite unconcerned : she stands aside and thus avoids the shocks. Her sting strikes the Caterpillar at the joint between the first ring and the head in the middle of the underside, at a spot where the skin is more delicate. This is the most important blow, the one which will master the Grey Worm and make it more easy to handle.

The Sand-Wasp now leaves her prey. She flattens herself on the ground, with wild movements, rolling on her side, twitching and dangling her limbs, fluttering her wings, as though in danger of death I am afraid that the huntress has received a nasty wound in the contest. I am overcome with emotion at seeing the plucky Wasp finish so piteously. But suddenly the Wasp recovers, smooths her wings, curls her antennae, and returns briskly to the

attack. What I had taken for the convulsions of approaching death was the wild enthusiasm of victory. The Wasp was congratulating herself on the way she had floored the enemy.

The Wasp grips the caterpillar by the skin of the back, a little lower than before, and pricks the second ring, still on the underside. I then see her gradually growing back along the Grey worm, each time seizing the back a little lower down, clasping it with the jaws, those wide pincers, and each time driving the sting into the next ring. In all, nine stings. After the first prick of the needle the Grey Worm offers but a feeble resistance.

Lastly, the Sand Wasp, opening the forceps of her jaws to her full width, seizes the Caterpillar's head and crunches it, squeezing it with a series of leisurely movements, without creating a wound. She pauses after each squeezing as if to learn the effect produced: she stops, waits, and begins again. This handling of the brain cannot be carried too far, or the insect would die; and strange to say the Wasp does not wish to kill the Caterpillar.

The surgeon has finished. The poor patient, the Worm, lies on the ground on its side, half doubled up. It is motionless, lifeless, unable to resist when the Wasp drags it to the burrow, unable to harm the grub that is to feed upon it. This is the purpose of the Wasp's proceedings. She is procuring food for her babies, which are as yet non-existent She will drag the Caterpillar to her burrow and lay an egg upon it. When the grub comes out of the egg, it will have the Caterpillar to feed upon. But suppose this Caterpillar were active? One movement

of his body would crush the egg against the wall of the cell. No, the Caterpillar must be motionless; but it must not be dead, for if it were, it would speedily decay and be unfit eating for the fastidious little grub. The Wasp, therefore, drives her poisoned sting into the nerve-centres of every segment whose movement could hurt the grub-baby. She does better than that. The victim's head is still unhurt, the jaws are at work; they might easily, as the Caterpillar is dragged to the burrow, grip some bit of straw in the ground and stop progress. The Caterpillar, therefore, must be rendered torpid, and the Wasp does this by munching his head. She does not use her sting on the brain, because that would kill the Caterpillar : she merely squeezes it enough to make the Caterpillar unconscious. ....

The Wasp acts with a precision that would make Science turn green with envy. She knows what man hardly ever knows. She knows her victim's complex nervous system and reserves her successive dagger thrusts for the successive ganglia of her Caterpillar. She behaves as though she knew. Her act is simple inspiration. Animals obey their compelling instinct without knowing what they do. But whence comes this sublime inspiration? Can theories of atavism, of natural selection, of the struggle for life interpret it reasonably? To me this was and remained one of the most eloquent revelations of the power that rules the world and guides the ignorant by the laws of its inspiration.

The Sand Wasp.—Henri Fabre.]

[தொடரும்]

1944ஞு டிசம்பர்மீ 19உ (தாரணஞு மார்கழிமீ 5உ)
மாலை 6-மணிக்கு மதுரை தல்லாகுளத்தில்
இராமநாதபுரம் மஹாராஜா அவர்கள்பங்களாவிற் கூடிய
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில்
முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராசனாதிபதி.

2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.

3. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.

4. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்

5. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. சங்கமாசிக வரவுசெலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2. இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய

(1) ஸ்ரீ. வா. கு. முகம்மது ஆரிபுநாவலரவர்கள், 31. செய்யது பள்ளித்தெரு, நாகூர்.

(2) ,, பண்டித V. S கந்தையா அவர்கள், மண்டூர் E. P. சிலோன்.

இவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3. மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்குக்கொடுத்துள்ள Fixed Deposit தொகை ரூ 25011–5–0யும் ஷை பாங்கிலேயே மறுபடியும் ஒரு வருஷத்துக்கு ரூ 100க்கு 3 வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

4. சங்கக்கலாசாலையிற் படித்துவரும் ஐந்துமாணவர்களின் போஷணைவகைக்கு இராமநாதபுரம் எஸ்டேட் தர்மகமை பண்டிலிருந்து 1944—1945ம் வருஷத்துக்குரிய சந்தா ரூ 600ம் சங்கத்துக்கு அளித்து உதவியிருப்பதற்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள்.

5. கமுதி, சோழவந்தான் இவ்விரண்டிடங்களையும் ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைகள் நடைபெறும் தலங்களாகச் சேர்க்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
19—12—'44.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.

பண்டைத் தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

௬0-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பண்டைக்காலத்துச் சுமேரியரையும் எகிப்தியரையும் சேர்ந்தோராயிருந்து, பின் இந்தியாவினுள்வந்து அன்னோரைப்போலச் சீர்திருத்தத்தில் மேம்பட்டுவிளங்கிய தமிழர், தங்கள் பழைய இனத்தவர்களோடு கடல்மார்க்கமாய்த் தொடர்புகொண்டொழுகினமைக்குச் சான்றுகள் பல உள. எகிப்தியர் சீர்திருத்தத்தில் ஏலவே முன்னேறி முதன்முதல் மரக்கலங்களைச் செய்தோர் என்பது சிலர்கருத்து. அங்ஙனமாயின், தமிழர் எகிப்தியரிடத்திலிருந்து தொன்றுதொட்டே கடலோடும்வித்தையைக் கற்றிருக்கலாம். எகிப்தியநாகரிகத்திற் பங்குபற்றிய கிரேத்தாதீவாரும் பினீசியரும் முற்காலம் பிறதேசக்கடலோடுதலிற் பிரக்கியாதிபெற்றவர்கள் என்ப. இருபாலாரோடும் தமிழருக்கு உள்ள தொடர்பு இன்றைக்கு அறிஞர்களால் ஒத்துக்கூறப்படுவதை முன்னர்க் கண்டோம். தமிழருள் ஒரு சாரார் தங்கள் தாய்நாட்டினின்று கரையையடுத்துக் கடல்மார்க்கமாய்வந்து இந்தியாவை அடைந்திருத்தலும் கூடும். ஆகவே, அன்னோர் இங்கும் கடலோடிகளாக விளங்கினமை ஆச்சரியமாகாது. ஆரியர் பண்டைநாளிற் கடலையும் மரக்கலங்களையும் ஒருவாறு அறிந்திருந்தனர் என அவர்களது இருக்குவேதம் காட்டியிருப்பினும், அவர்கள் தாங்களே கடலோடிகளாயிருந்ததற்குச் சான்றில்லை. அன்னோர் கடலையும் கப்பலையும் பற்றிச் சொல்லுவன அவர்கள் புதியவாய் அறிந்தவற்றை ஆச்சரியத்தோடு விவரிப்பதைக்காட்டுகின்றன என்பர்.* தமிழர்மட்டிலோ திரமிலர் திரையர் திமிலர் பரவர் எனும் அன்னோர் பெயர்களும் மரக்கலத்துக்கு அவர்கள் அன்றுதொட்டு வழங்கிய ஓடம், தோணி, மிதவை, அம்பி, திமில், மரம், கலம், கப்பல், நாவாய் முதலியசொற்களும் அவர்கள் ஆதிதொட்டே கடலோடு சம்பந்தப்பட்டவர்கள் எனக் காட்டுமன்றோ.

---

* Periplus of the Erychracan Sea (W. H. Schoff) p. 229.

தமிழர் ஆதியிற் சுமேரியரோடும் அவர்களுக்குப் பின் அவர்களது இருப்பிடங்களைக் கவர்ந்துகொண்ட பபிலோனியரோடும் வியாபாரப்போக்குவரவுடையோராயிருந்தனர் என்பதற்கு முக்கெயிர் (முக்கையாறு) எனப்பட்ட கல்தேயரின் ஊர்நகர அழிவுகளுள்ளேகண்ட தேக்கமரத்துண்டு தக்க சான்றாகும். அந்த ஊர் நகர் நிர்மாணிக்கப்பட்டது ஊர்-ஏயா அல்லது ஊர்-பகஸ் எனும் அரசன்காலத்தில் என்ப. அவன் சுமேரியாவையும் அக்கத்தியாவையும் ஒன்றுகூட்டிப் பபிலோனியாவின் முதலரசனாய்க் கி. மு. மூவாயிரம்வரையில் ஆண்டவன். அந்தப் பழையநகரியிற் கண்டெடுத்தது மலையாளத்திலேயும் பர்மாவிலேயும் அன்றி வேறெங்கணுமில்லாத இந்தியத்தேக்கு என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே, கி. மு. மூவாயிரம்வரையில் இந்தியாவுக்கும் பபிலோனியாவுக்கும் இடையில் வர்த்தகம் நடந்தமை நிச்சயம்.* இந்திய "முத்திரை"கள் சுமேரியாவிற் கண்டெடுக்கப்பட்டதையும் நினைவிற் கொள்ளுக. எலாமித்தருடைய சூசாநகரின் அழிவுகளுக்குள்ளே தென்னிந்தியாவிலிருந்து போன சங்குப் பூசைப்பாத்திரங்களும் வளையல்களும், பூர்வலகாஷ் நகருக்குள்ளே சங்குஆபரணங்களும் கண்டெடுக்கப்பட்டன.† இவ்வாறே மஸ்லின் எனும் மெல்லிய துணிக்கு (Muslin, Mousseline) பபிலோனியர் இட்டிருந்த சிந்து எனும் பெயரும் அதன் உற்பத்திஸ்தானமாகிய சிந்துநாட்டுப்பெயரேயாம். இப்பெயரே பின் கிரேக்கத்தில் சிந்தோன் (Sindon எனவும், எபிரேயத்தில் சதயின்(Sadain)எனவும் ஆங்கிலத்தில் Satin எனவும் மாறிவந்தது என்பர்.‡ பிற்காலம் அதனை இந்தியப் பஞ்சைக்கொண்டு நெய்த முசோலோ (Mussolo) எனும் மெசொப்பொத்தாமியாப் பட்டணப்பெயரிலிருந்து சிந்துவுக்கு முஸ்லின் அல்லது மஸ்லின் எனும்பெயர் வந்ததுபோலும். கிருஷ்ணசுவாமிஐயங்கார் ஆதிய சிலர் $ சிந்துநதிப்பெயரை ஆரியம் என்று மயங்கி, ஆரியரே மஸ்லின்துணியை நெய்தனர் எனவும் அது தமிழ்நாட்டாருடைய வர்த்தகப்பொருள்களுள் ஒன்றாய்ப்

---

* Ragozin : Vedic India pp 305-6

† J. Hornell : Marine Zoology of Okhamandal pt. II

‡ S. Krishnaswami Aiyangar : Some contributions of S. India to Indian Culture, p. 324

$ Ibid. p. 326.

பபிலோனியாவுக்குப் போயிற்றெனவும் கூறுவோராயினர். சிந்து நதிப்பெயர் சிந்துதலில் நின்று எழுந்த தமிழ்ச்சொல்லேயன்றி வடமொழிப்பெயரன்று. நெசவுதொழிலும் தமிழருள்ளே ஆரியர் வரவுக்குமுன் தொன்றுதொட்டிருந்து * பின் அன்னோரால் மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பின்னுற் காட்டுவோம்.

[தொடரும்.]

மதிப்புரை

[திருவானைக்காவுலா:— இயற்றியவர் காளமேகப்புலவர். பதிப்பாசிரியர்: திரு. மு. அருணசலம் M.A. அவர்கள். வெளியிடுவித்தோர்: சோக்கநாதபுரம் செந்தமிழ்க்கழகத்தார். விலை ரூ 2-8-0. கிடைக்குமிடம்:—சக்திகாரியாலயம், ராயப்பேட்டை, சென்னை.]

உலா என்பது பிரபந்தவகையுள் ஒன்று. திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது காளமேகம் என்ற புலவர் பெருமான் இயற்றிய இவ்வுலா (மூலம்மட்டும்) அரைநூற்றுண்டுக்கு முன் அச்சிடப்பெற்றதுண்டு. அப்பதிப்பு இதுபொழுது கிடைத்தற்கரிதானமையின், இவ்வுலாவில் ஆங்காங்கு அறிய வேண்டியவற்றை விளக்கித் திருவாளர் மு. அருணசலம் M.A. அவர்கள் எழுதிய குறிப்புரையுடன், உலாவின் இலக்கணம், அதன் நுவல்பொருள், திருவானைக்காத்தலவரலாறு, காளமேகப்புலவர் வரலாறு முதலியவற்றை ஆராய்ச்சிமுறையில் விரிக்கும் நூன்முகமும் உடையதாக இவ்வுலாப்பதிப்பினைக்கற்பார்க்குப்பயன்படும்படி சொக்கநாதபுரம் செந்தமிழ்க்கழகத்தார் வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது. இக்கழகத்தார் மேலும் இத்தகைய பலநூற்பதிப்புக்களைத் தக்கவர்களால் நன்கு பரிசோதித்து வெளியிடுவித்துத் தமிழ்ப்பணிபுரிந்து நீடுவாழ்க.

---

* See Periplus &c. p. 256—8. தமிழர் முன்னுளில் நெய்த மிக மென்மையான துணியின்ஞாபகத்தைப் பிற்காலத்துச் சங்கநூல்களிலும் காண்கின்றோம். "ஆவியன்ன அவிர்நூற்கலிங்கம்" (பெரும்பாண்); "புகைவிரித்தன்ன பொங்குதுகில்" (புறம்); "நோக்குநுழைகல்லா நுண்மைய, பூக்கனிந்தரவுரியன்ன அறுவை" (பொருநர்) ஆதியன காண்க.

பண்டிதமணிவாழ்க்கைச்சித்திரம்:—மதிநுட்பம் நூலோடுடைய திருவாளர் பண்டிதமணி மஹாமஹோபாத்தியாய மு. கதிரேசச்செட்டியாரவர்களைத் தமிழுலகம் நன்கறியும். வடமொழியறிவோடுகூடிய அவருடைய தமிழ்ப்புலமை பாலும் தேனும் கலந்தநிலைபோல் இனிமைமிக்குவிளங்குவது. அப்புலவர்பெருமானது புகழுடற்சித்திரம், திரு. வித்துவான் வி. சு. திருநாவுக்கரசுஅவர்களால், தாம் அவரோடு பழகியறிந்தனவும் அவ்வாறறிந்த பிறர்கூறியனவுமான அவருடைய புலமைநலன், ஆராய்ச்சித்திறமை, சொற்பொழிவாற்றல், செய்யுட்சிறப்பு, உரைநடைநயம், மொழிபெயர்க்குந்திறம், கற்பிக்குமாற்றல், நாவியற்சுவையொடு காவியச்சுவை நுகருங் கவின், பலதிறப்பட்ட மக்கட்குழுவிடை இனியராய்ப்பழகும் முறை, பிறர்கொள்கைகளை மறுக்குமிடத்து வன்மொழியாலன்றி நன்மொழியால் மறுத்துரைக்குந்தன்மை முதலிய உறுப்புக்களால் செவ்வியநடையில் நன்குவரையப்பெற்ற இப்புத்தகம் தமிழ்நாட்டார்க்கு ஒரு புதுவிருந்தாகும்.

திருவாளர் கவிமணி சி. தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் இயற்றித்தந்த வாழ்த்துப்பாடல்களும் திருவாளர் ஸர். R K ஷண்முகஞ்செட்டியார் KT, K. C. I. E. அவர்கள் உதவிய சீரிய முன்னுரையும் பண்டிதமணியின் பூதவுடற்படத்தோடு கூடிய இப்புகழுடற்சித்திரத்துக்கு ஏற்ற அணிகலன்களாக மிளிர்கின்றன.

இவ்வாறு ஒரு பெரும்பேராசிரியரின் வாழ்க்கைச் சித்திரத்தைத் தக்கசித்திரிகரால் உயர்ந்தமுறையில் வரைவித்து, அது பலவகையிலும் சிறக்குமாறு அச்சிட்டு வெளியிடுவித்த புதுக்கோட்டைத் தமிழன்னைநிலையத்தார் மிகமிகப் பாராட்டற்குரியர். இப்புத்தகத்தின்விலை ரூ 1—4—0. கிடைக்குமிடம்: தமிழன்னை நிலயம், கீழராஜவீதி, புதுக்கோட்டை.

ஒரு குறிப்பு,

அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்ட காகிதக்கட்டுப்பாடு சம்பந்தமான உத்தரவு செந்தமிழ்ப்பக்கஅளவைச் சிறிது அதிகப்படுத்திக்கொள்ள அநுமதிக்கிறது. அதன்படி தைச்செந்தமிழ்ப்பகுதி 18 பக்கமாக வெளிவரும். மேலும் அதிகப்பக்கங்களுடன் செந்தமிழை வெளியிட அநுமதி கிடைக்குமென்று நம்புகிறோம்.

மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.